செ.வெ.எண்:35 நாள்:31.12.2019

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, கரூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2020 பணிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக, 23.12.2019 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்நிலையில், கரூர் மாவட்டத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட வாக்காளர்கள் குறிப்பாக 01.01.2020ந் தேதியினை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்ட தகுதியான நபர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் விடுபட்டு இருப்பின், விடுபட்ட நபர்கள் வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரினை சேர்த்திடவும், வாக்காளர்கள் தங்களது பெயர் சேர்க்கப்பட்ட விவரங்களை அறிந்துகொள்ளவும் ஏதுவாக சிறப்பு முகாம் எதிர் வரும் 04.01.2020, 05.01.2020, 11.01.2020 மற்றும் 12.01.2020 ஆகிய தினங்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ள நாட்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் தொடர்பாக படிவங்கள் பெறவுள்ளனர். எனவே, பொதுமக்கள் 04.01.2020, 05.01.2020, 11.01.2020 மற்றும் 12.01.2020 ஆகிய தினங்களில் அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் நடைபெறவுள்ள சிறப்பு முகாமில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை மனுக்கள் அளித்து பயனடையுமாறு கரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.த.அன்பழகன்**, இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.